வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண். 3516/ஆ4/ 2024. நாள். 06.02.2025

பொருள் தேர்வுகள்–வேலூர் மாவட்டம்– இடைநிலைக் கல்வி விடுப்புச் சான்றிதழ் –பொதுத் தேர்வு– மார்ச்/ஏப்ரல் 2025 விடுபட்ட / பார்கோடு இல்லாத /சேதமடைந்த முகப்புத்தாட்கள்–வழங்குதல் தொடர்பாக,

பார்வை 1.அரசு தேர்வுகள் இயக்ககம் சென்னை–6 கடித ந.க.எண். 018310/பி2/2024. நாள்.05.02.2025

=============

பார்வையில் காணும் அரசுத் தேர்வுகள் இணை இயக்குநர் (பணியாளர்) அவர்களின் செயல்முறைகளின் படி வேலூர் மாவட்டத்தில் நடைபெறவுள்ள மார்ச்/ஏப்ரல் 2025 இடைநிலைப் பொதுத்தேர்வுகளுக்குரிய முடிப்புத் தாட்கள் முதன்மை விடைத்தாட்களுடன் இணைத்து தைக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட தேர்வு மையங்களுக்கு அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள் மூலம் ஒப்படைக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில், பெறப்படாத முகப்புத்தாட்கள், சேதமடைந்த / பார்கோடு இல்லாத முகப்புத்தாட்களின் விவரங்களை பட்டியலிட்டு, முகப்புத்தாட்களுடன் இணைத்து தைக்கப்பட்ட முதன்மை விடைத்தாட்களுடன் சேர்த்து (சேதமடைந்த / பார்கோடு இல்லாத முகப்புத்தாட்கள் மட்டும்) தேர்வு மைய தலைமை ஆசிரியர்கள் 07.02.2025 அன்று மாலை 3.00 மணிக்குள் வேலூர், கல்புதூர், அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

எனவே, அனைத்து தேர்வு மையத் தலைமையாசிரியர்களையும் மேற்குறிப்பிட்ட நாட்களுக்குள் தவறாது மாற்று முகப்புத்தாட்கள் கோரப்படும் தேர்வர்களின் விவரப்பட்டியலை வேலூர், கல்புதூர், அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்தில் இத்துடன் இணைக்கபட்டுள்ள படிவத்தினை பூர்த்தி செய்து சமர்ப்பிக்குமாறு மீள தெரிவிக்கப்படுகிறது

இணைப்பு : MISSING TOP SHEET – FORM

//ஓம்.செ.மணிமொழி //
முதன்மைக் கல்வி அலுவலர்
வேலூர்.

பெறுநர்

- அனைத்து வகை உயர் /மேல்நிலை தேர்வுமையப்பள்ளி தலைமையாசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்கள் வேலூர் மாவட்டம்.

நகல்:

1. வேலூர் மாவட்ட கல்வி அலுவலர்(இடைநிலை /தனியார் பள்ளிகள்)–தக்க நடவடிக்கைக்காகவும் அனுப்பப்படுகிறது.
2. வேலூர் மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள் தகவலுக்காக அனுப்பப்படுகிறது.